**S.C.No. 465/2012 PW-: 1 Mr. Latha Date: 17-12-2024**
**(A1, A5 ,A6 died. A2 present.A3 absent P/A )**

**<u>குறுக்கு விசாரணை :(2, 3 எதிரிகள் தரப்பில்)</u>**

என் கணவரான இறந்து போன விஜயகுமாரின் அண்ணன் பெயர் தெய்வசிகாமணி என்றால் சரிதான், அந்த தெய்வசிகாமணியின் மகனான ஞானம் என்பவரின் மீது காவல் நிலையத்தில் பல்வேறு வழக்குகள் இருந்தன என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என் கணவர் இறந்த காலகட்டத்தில் நான் Amway யில் பணியாற்றி வந்தேன். நான் வேலை காரணமாக காலையில் சென்றுவிட்டு மாலையில் திரும்புவேன் என்றால் வாடிக்கையாக அவ்வாறு கிடையாது, நேரம் கிடைக்கும் போது மட்டும்தான் வேலைக்கு போய்விட்டு வருவேன்.நான் வசந்தா என்பவரின் வீட்டில் குடியிருந்தேன், கீழ் தளத்தில் மேற்படி வசந்தா குடியிருந்தார். முதல் தளத்தில் நான் குடியிருந்தேன், வசந்தாவின் மகனும் அதே தளத்தில் பின் பகுதியில் குடியிருந்தார். வசந்தாவின் மகன் பெயர் தெரியாது. புகாரில் உள்ள விஷயங்களை எழுதியது நான் அல்ல, எழுதியவரின் பெயர் தற்போது நினைவில்லை, புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரை எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் நேரம் நினைவில்லை ஆனால் மதியத்திற்கு பிறகு கொடுத்தேன். புகார் கொடுக்கும்போது யார் எல்லாம் காவல் நிலையம் சென்றோம் என்றால் நான் போனேன், என்னுடன் யார் வந்தார்கள் என்று தற்போது நினைவில்லை. என் கணவர் இறந்த பின்னர் எவ்வளவு நேரத்தில் போலீசார் என் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் கொஞ்ச நேரத்தில் வந்தார்கள். ரோந்து வாகனத்தில் போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு யார் தகவல் சொல்லி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் வந்த பிறகு எவ்வளவு நேரத்தில் பிரேதம் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டது என்றால் சுமார் ஒரு மணிநேரத்தில் கொண்டு செல்லப்பட்டது. அங்கு வந்த போலீசார் எவ்வளவு நேரத்தில் என் மகன் சதீஷ் என்பவரை மருத்துவ மனைக்கு கொண்டு போனார்கள் என்றால் சுமார் அரை மணி நேரத்தில் மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள். என் மகனை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது நான் அங்கிருந்தேன், பார்த்தேன். என் மகன் மற்றும் பிரேதத்தை மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு சென்ற பின்னர் எவ்வளவு நேரத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சுமார் கால் மணிநேரம் அரை மணி நேரத்தில் புகாரை கொடுத்துவிட்டேன். வெட்டுபட்டு கிடந்த என் கணவரை நான் தொட்டு, தூக்கி பார்த்தேனா என்றால் இல்லை. நான் என் மகனையும் தொட்டு, தூக்கி பார்க்கவில்லை. என் மகனை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க நான் ஏதேனும் முயற்சிகள் செய்தேனா என்றால் இல்லை, போலீசாரே என் மகனை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என் மகனை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது நான் உடன் செல்லவில்லை,

வேறு யாரேனும் உடன் சென்றார்களா என்று தெரியவில்லை. புகாரை கொடுத்த பின்னர் சுமார் அரை மணிநேரம் காவல் நிலையத்தில் இருந்தேன். அந்த நேரத்தில் என்னுடன் யார் இருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. புகாரை கொடுத்த பின்னர் வீட்டிற்கு வந்தேன், என் கணவரின் ஈமகாரியம் முடிந்த பின்னர் தான் என் மகனை பார்க்க போனேன். சுமார் 16 நாட்கள் கழித்து தான் என் மகனை பார்க்க மருத்துவமனைக்கு போனேன். புகாரை கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்களா என்று நினைவில்லை. என்னை விசாரணை செய்யும் போதே வேறு யாரையேனும் விசாரித்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. விசாரணை செய்யும் போது நான் சொன்னவற்றை காதால் கேட்டுக்கொண்டார்களா என்றால் ஆமாம். இந்த வழக்கில் இறந்து போன எதிரி சங்கர் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். எதிரிகள் ஸ்ரீதர், ஜெகன் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியாது. புகாரில் 2ம் பக்கத்தில் " பார்த்த போது எனக்க தெரிந்த அயனாவரத்தை சேர்ந்த சங்கர், ஸ்ரீதர், கார்த்திக் என்ற லுசுகார்த்திக், ஜெகன் ஆகியோர் கத்தியுடன் என் வீட்டில் இருந்து படி இறங்கி ஆளுக்கு ஒரு பக்கமாக ஓடினார்கள்" என சொல்லியிருப்பதில் சங்கர் என்ற பெயரை தவிர மற்ற நபர்களின் பெயர் தெரியாது என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் " எதிரி சங்கரின் தம்பி கதிர் என்பவரை வெட்டி கொன்ற வழக்கில் எனது கணவர் தனது அண்ணன் மகனை சப்போட் செய்தார் என எதிரி சங்கர் எண்ணிக்கொண்டு எனது கணவரை கொலை செய்வேன் " என கூறியிருப்பதை என்னுடைய புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். எதிரி சங்கர் வாயிலாக எங்கள் குடும்பத்திற்கு அச்சுறுத்தல் இருப்பதாக சங்கருக்கு எதிராக ஏதேனும் புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஓடிய நபர்கள் எந்த பக்கம் ஓடினார்கள் என்ற விவரத்தையும் கத்தியில் ரத்தம் இருந்ததாக என்ற விவரத்தையும் புகார் மற்றும் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நினைவில் இல்லை. நான் எனது முதல் விசாரணையில் Activa இருசக்கர வாகனத்தில் எனது வீட்டில் 1.30 மணிக்கு வரும் போது எதிரி ராஜா என்பவர் தெரு முனையில் இருசக்கர வாகனத்தில் எந்த இடத்தில் நின்றுகொண்டிருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி ராஜாவை பார்த்து ஏன் நிற்கிறாய் என்று கேள்வி கேட்டேனா என்றால் இல்லை. அந்த காலகட்டத்தில் என்னிடமும் என் கணவரிடமும் Mobile Phone இருந்ததா என்றால் சரிதான். ராஜா என்ற எதிரியை தெருமுனையில் பார்த்தவுடன் எச்சரிக்கை நோக்கில் என் கணவருக்கு போன் செய்தேனா என்றால் இல்லை. நான் வீட்டிற்குள் நுழையும் போது மாடிப்படியில் என் மகன் மூக்கில் வெட்டு பட்டும், தலையில் வெட்டுபட்டும், இடது கையில் வெட்டுபட்டும், கை தொங்கிய நிலையில் இருந்தார் என்றும், முதல் விசாரணையில் கூறிய விவரத்தை புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மகனின் வலது

உள்ளங்கையில் கத்தி காயம் இருந்ததாக முதல் விசாரணையில் சொல்லியிருப்பதை புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in the open court and was read over to the witness and accepted and signed by him/her to be correct.

V PANDIARAJ Digitally signed by V PANDIARAJ

Dt.17.12.2024 IV Addl. Sessions Judge